Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 111/2023

## Deposition of P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் |
| Father’s Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | வடவாளம் |
| Religion | : | இந்து |
| Age | : | **42/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.06.2024**
(3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 1,2,5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2,5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் வடவாளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அய்யனார் கோவிலில் காவலாளியாக வேலைப்பார்த்து வருகிறேன். அ.சா.**1** ஆறுமுகம் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.**1** ஆறுமுகம் **40** ஆடுகளை வைத்து வளர்த்து வந்தார். சுமார் **2** வருடங்களுக்கு முன்பு இருக்கும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் காலை வேளையில் ஆறுமுகம் வைத்திருந்த **40** ஆடுகளில் **10** ஆடுகள் திருடுபோய்விட்டதாக என்னிடம் சொன்னார். நானும் மணிகண்டன் என்பவரும் ஆறுமுகத்துடன் சேர்ந்து அவரது ஆடுகளை தேடிப்பார்த்தோம். கிடைக்கவில்லை. அதனால் ஆறுமுகம் சம்மட்டிவிடுதி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காணாமல்போன ஆடுகள் யுனோவா காரில் வைத்து கிடைத்ததாக சொல்லிக்கொண்டார்கள். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

அ.சா.1 ஆறுமுகம் எனது ஊர்க்காரர். நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார்விசாரணையிலும் சொன்னேன்.
ம.வி.இல்லை